இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒருங்கிணைந்த நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான ஒருங்கிணைந்த வருமானக் கூற்று, ஒருங்கிணைந்த மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் ஒருங்கிணைந்த காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பா 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 35 ஆம் இலக்க இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன (திருத்தம்) அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க காணி மீட்பு மற்றும் அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்தின் 17(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### பாதகமான அபிப்பிராயம் - கூட்டுத்தாபனம்

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி

மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியான வரையறுக்கப்பட்ட காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி (தனியார்) கம்பனியினது கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தபோதும், துணைக் கம்பனியினது நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் அதன் உப துணைக் கம்பனியான எல் ஆர் டீ சீ சேவைகள் (தனியார்) கம்பனியினது நிதிக்கூற்றுக்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கவில்லை. துணைக் கம்பனி சம்பந்தமான கூட்டுத்தாபனத்தின் உரித்து 80 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

பின்வரும் அவதானிப்புகளின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி (தனியார்) கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மறுப்பு அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்தது.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 212.24 மில்லியன் மீதிகளுக்குரிய எழுத்து மூல சான்றுகள் இல்லாதிருந்தமையால் அந்த மீதிகளின் நிலவுகை, பூரணத்துவம் மற்றும் சரியான தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 35.05 மில்லியன் கொடுப்பனவு செய்ய வேண்டிய மற்றும் பெற வேண்டிய மீதிகள் தொடர்பான சரியான தன்மையை பரிசீலிப்பதற்கான மீதிகளது உறுதிப்படுத்தல் வழங்கப்பட்டிராமை

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 11 இற்கு முரணாக ஒப்பந்த வருமானத்தைக் காசு அடிப்படையில் கணக்கிலிட்டமை.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான புத்தகப் பெறுமதி (Net Book Value) ரூபா 3.15 மில்லியனான சீமெந்து அச்சுக்கல் இயந்திரமொன்றிற்காக அழிவு நட்டம் (Impairment) கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - கூட்டுத்தாபனம்

### 2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

(i) நியமத்தின் பிரகாரம், விரிவான வருமானக் கூற்றிலே காலப்பகுதிக்குரிய ஏனைய விரிவான வருமானச் சீராக்கல்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் இருக்க வேண்டுமாயினும், கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டிற்கெனத் தயாரித்த விரிவான வருமானக் கூற்றில் ஏனைய விரிவான வருமானச் சீராக்கலோ அல்லது அவற்றுடன் தொடர்புடைய வெளிப்படுத்தல்களோ இருக்கவில்லை.

(ii) நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் ஆகியன நியாயமான பெறுமதியில் (Fair Value) சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், கூட்டுத்தாபனத்தினால் ரூபா 1,288.15 மில்லியன் கிரயமுடைய சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்கள் என்பவற்றினது நியாயமான பெறுமதியை மதிப்பிட்டு அதனை நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் ரூபா 163.87 மில்லியன் பெறுமதியுடைய வைப்புக்களை வங்கிப் பிணை முறியாக வைத்திருந்தபோதிலும், பிணையாக வைக்கப்பட்ட நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 100 மில்லியன் மாத்திரமே என நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே பிணைமுறிகளுக்குரிய மீதி உறுதிப்படுத்தல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 11**

(i) கூட்டுத்தாபனம் ஈடுபட்டவாறிருக்கும் நிர்மாண ஒப்பந்தங்களது (Ongoing Constructions) வருமானம், கிரயம் மற்றும் இலாபம் என்பன முடிவுறு சதவீத அடிப்படையில் (Stage of Completion) இனங்காணப்பட்டுள்ளதாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தபோதும், ஒப்பந்த வருமானம், கிரயம், இலாபம் என்பன நியமத்தில் குறிப்பிடப்பட்டவாறு இனங்காணப்பட்டிருக்கவில்லை. சான்றுறுதிப்படுத்தப்பட்ட வேலைகளுக்குச் செலவாகிய கிரயத்தை அதனோடு தொடர்புடைய வருமானத்துடனும் செலவுடனும் சீராக்கல் செய்யக்கூடியவாறு இனங் காணாமையால் ஒரே சீரான அடிப்படையில் வருமானத்தை இனங்காண முடியாதிருந்தது. இதன் காரணமாக, மீளாய்வாண்டின்போது 21 நிர்மாண வேலை ஒப்பந்தங்களில் இனங்காணப்பட்டிருந்த இலாபமானது பெருமளவு மாற்றத்திற்குள்ளாகியிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களுக்கமைய ரூபா 728.85 மில்லியன் தொகையான 13 நிர்மாண வேலை ஒப்பந்தங்களில் முடிவடையாத வேலைகளின் முடிவடைந்த சதவீதமும் இனங்காணப்பட்ட வருமானமும் தொடர்பான விபரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 20**

நியமத்தின் 39 சீ பிரிவிற்கமைய மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கப் பெற்ற ரூபா 778.41 மில்லியன் அரசாங்க மானியம் தொடர்பில் நிறைவேற்றப்படாத நிபந்தனைகள் மற்றும் எதிர்பாரா நிகழ்வுகள் தொடர்பாகவும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணிச் சுவீகரிப்பு தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்கு எதிராகத் தனி நபர்கள் தொடுத்திருந்த 17 வழக்குகளால் விளையக்கூடிய ரூபா 296.96 மில்லியன் நிகழத்தக்க பொறுப்புகள் கணிப்பிடப்பட்டு நியமத்தின் பிரகாரம் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 38**

நியமத்தினது 118 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கணனி மென் பொருட்கள் வேறாக இனங்காணப்பட்டிராததுடன், அது தொடர்பில் நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் போதியளவு வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39**

நியமத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் நிதிசார் சொத்துக்கள் (Financial Assets) வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, நிதிச் சொத்தாக இனங்காணப்பட வேண்டிய வியாபார கடன்பட்டோரினது நட்டக்கடன் பெறுமதியை நோக்காகக் கொண்ட சான்றின் (Objective Evidence) அடிப்படையில் இனங்காணப்பட்டு யதார்த்தபூர்வமான பெறுமதியை நிதிக்கூற்றில் சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது ஓராண்டிற்கு மேற்பட்ட சகல கடன்பட்டோருக்கும் 100 சதவீத ஐயக் கடனுக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40**

(i) நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய ரூபா 745.57 மில்லியன் முதலீட்டுச் சொத்துக்களுக்குரிய கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்படவில்லை. அத்துடன், அந்த சொத்துக்களது நியாயமான பெறுமதியைக் கணிப்பிட்டு அதனை நிதிக்கூற்றில் காட்டவில்லை. அவ்வாறே, கூட்டுத்தாபனம் வாடகை அடிப்படையில் வெளி நபர்களுக்கு வழங்கிய காணி, முதலீட்டுச் சொத்தாக நிதிக் கூற்றில் காட்டப்பட்டிராததுடன் அக்காணிகளது பெறுமதி தொடர்பான தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான கூட்டுத்தாபனத்தினால் நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 17.58 மில்லியன் பெறுமதியான 07 காணிகள் முதலீட்டுச் சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாரிய கொழும்பு நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் முன்னைய ஆண்டின் போது கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருந்த 03 இயந்திரங்களது பெறுமதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படவில்லை.

(ஆ) வேலை முடிவடைந்த செயற்திட்டங்களில் உருவாகியிருந்த சொத்துக்கள் குறித்த சொத்துக்களுடன் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குப் பதிலாக அச்சொத்துக்களுக்குச் செலவழிக்கப்பட்ட ரூபா 716.50 மில்லியன் மற்றுமொறு நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய முடிவடையாத ரூபா 728.85 மில்லியன் செயற்திட்ட பணிகள் வியாபார இருப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக நடைமுறை சொத்துக்கள் அந்த பெறுமதியால் மிகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் திறைசேரி மானியங்களின் கீழ் நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்களுக்காக திறைசேரியிலிருந்து ரூபா 2,296.80 மில்லியன் பெற வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்களில் அந்த பெறுமதி ரூபா 1,626.27 மில்லியனாக குறிப்பிடப்பட்டிருந்தமையின் காரணத்தால், கூட்டுத்தாபனத்தினால் திறைசேரி மானியங்களின் அடிப்படையில் அறவிடப்பட்ட சேவைக் கட்டண வருமானம் ரூபா 670.53 மில்லியனால் குறைத்தக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் வேறஸ் கங்கை செயற்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் பணத்தின் தவணை மற்றும் வட்டியினை கூட்டுத்தாபனத்தினால் உரிய திகதிகளில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையால், வங்கியால் கணிப்பிடப்பட்ட தண்டப்பண வட்டியான ரூபா 4.25 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களில் சென்மதியாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிதிக்கூற்றுக்களில் பிற்போடப்பட்ட வருமானமொன்றாக (Deferred Income) காண்பிக்கப்பட வேண்டிய வேறஸ் கங்கை செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மற்றும் திறைசேரியிலிருந்து அறவிடப்பட வேண்டிய பெறுமதியான ரூபா 3,332.94 மில்லியன் கூட்டுத்தாபனத்தின் வருமானமாக காண்பிக்கப்பட்டமையால், மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் வருமானம் அந்த பெறுமதியால் மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) கூட்டுத்தாபனத்தின் மணல் இருப்பு பதிவேட்டிற்கமைய விற்பனை செய்யப்பட்ட கடல் மணலின் அளவு 117,782 கியூப்களாக காணப்பட்ட போதிலும், மணல் விற்பனைப் பதிவேட்டிற்கமைய அது 118,614 ஆக காணப்பட்டது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் கூட்டுத்தாபனத்தின் மணல் விற்பனை வருமானம் 832 கியூப்களால் அல்லது 6.74 மில்லியனால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் மிஹிஜய கூட்டெரு செயற்திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான செலவினமாக நிதிக்கூற்றுக்களினுள் ரூபா 139,378 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்திற்குரிய பொதுப் பணிச் செலவினம் உள்ளடக்கப்பட்டிராமையால் செயற்திட்டத்தின் இலாபம் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குத்தகை வாடகையினை வருடாந்தம் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், 2005 ஆம் ஆண்டு முதலே குத்தகையாளருடன் சட்டரீதியான குத்தகை உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. மேலும், கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திற்கு சொந்தமான 5.77 பேர்ச் காணியொன்று 2005 யூலை 01 ஆந் திகதி குத்தகை அடிப்படையில் தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2014 யூலை மாதம் முதல் அதற்குரிய வருமானம் கணிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) வேரஸ் கங்கை மழைநீர் கால்வாய் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் பாதிப்பிற்கு உள்ளாகும் நபர்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியளவில் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 73.51 மில்லியன் தொகையான முற்பணங்கள், நிதிக்கூற்றுக்களில் முற்பணமாக காண்பிப்பதற்குப் பதிலாக நானாவித செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டமையின் காரணத்தால், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனத்தின் நடைமுறைச் சொத்துக்கள் அந்த பெறுமதியால் குறைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், ஆண்டிற்கான செலவினம் அந்த பெறுமதியால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியொன்றான காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி தனியார் கம்பனியிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு பெற வேண்டியதாக கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 35,083,245 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கம்பனியின் புத்தகங்களுக்கமைய அது ரூபா 9,987,145 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டியதாக கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 23,501,000 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த கம்பனியின் கணக்குகளில் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற வேண்டியதாக எந்தவிதமான பெறுமதியும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் உப துணைக் கம்பனியொன்றான எல் ஆர் டீ சீ சேவைகள் (தனியார்) கம்பனியிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டியதாக கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,441,387 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கம்பனியின் புத்தகங்களுக்கமைய அந்த மீதி ரூபா 26,571 ஆகும். அவ்வாறே கூட்டுத்தாபனத்தினால் கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா 12,446,000 தொகை கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய ரூபா 867 மில்லியன் கடன்பட்டோர் மீதியினுள் 2 முதல் 5 ஆண்டுகளாக நிலுவையாக உள்ள ரூபா 255 மில்லியன் கடன் மீதியும், 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவையான ரூபா 24 மில்லியன் கடன் மீதியும் உள்ளடங்கியிருந்தன. அவ்வாறே இந்த மீதிகளுக்குரிய மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தியன உயன புகையிரத சிற்றுண்டிச்சாலை நிர்மாண வேலை தொடர்பாக 2014 நவம்பர் 20 ஆந் திகதி இலங்கை இராணுவத்திற்கு வழங்கிய முற்பணத்தில் ரூபா 11,576,801 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறித்த வேலை முடிவுற்று இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது. அவ்வாறே, இம் முற்பணத்தினை வழங்கும் போது ஒப்பந்தாரரிடம் முற்பணப் பிணை முறி பெறப்பட்டிருக்கவுமில்லை.

(இ) மீளாய்வாண்டினது முடிவளவில் கொலன்னாவையிலும் சாலமுல்லையிலும் 216 வீடுகளை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் (ஏ கட்டிடம்) முடிவடைந்து இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும், நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெற வேண்டிய ரூபா 86.51 மில்லியன் மற்றும் பிடிகாசு தொகையான ரூபா 25.92 மில்லியன் என்பவற்றை கூட்டுத்தாபனம் அறவிடத் தவறியிருந்தது.

(ஈ) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்காக கொலன்னாவையிலும் சாலமுல்லையிலும் நிர்மாணித்த 792 வீடுகளை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் விலைப்பட்டியல் கொடுப்பனவு செய்யப்படுவதற்காக (பீ மற்றும் சீ கட்டிடங்கள்) சேவை வழங்குநரது பரிசீலனை அறிக்கையைக் கோரும் விண்ணப்பத்தை கூட்டுத்தாபனம் வழங்கத் தவறியமையால் கூட்டுத்தாபனம் பெற வேண்டிய முறையே ரூபா 74.36 மில்லியன் மற்றும் பிடிகாசு 30.89 மில்லியன் என்பவற்றைப் பெறுவதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே நிர்மாண வேலைகள் இடை நிறுத்தப்பட்டிருந்தமையால் சேவை நாடுநர் கொடுப்பனவு செய்திருந்த ரூபா 298.48 மில்லியன் (Mobilization Advance) தொழிலாரம்பிப்பு முற்பணத்தை மீளச் செலுத்துவதற்கும் கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(உ) 2012 நவம்பர் 28 ஆந் திகதியன்று எல் ஆர் டி சீ (சேவைகள்) கம்பனியிடமிருந்து கடன் அடிப்படையில் பெறப்பட்ட ரூபா 3 மில்லியன் பெறுமதியான மோட்டார் வாகனத்தின் பொருட்டுக் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 1978 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட்டுத்தாபனத்தினால் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளின் விற்பனைக்காக காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 69.60 மில்லியனைக் கொடுப்பனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி அபிவிருத்தியின் பொருட்டு வெளி நபர்களிடமிருந்து கூட்டுத்தாபனம் பெற்றிருந்த ரூபா 966 மில்லியன் காணி விற்பனை வைப்புத் தொகையில் 1 முதல் 3 வருடங்களுக்குரிய ரூபா 14.64 மில்லியன் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 489 மில்லியன் தொகை தீர்க்கப்படாதிருந்தது.

(ஏ) இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமாகவிருந்த முத்துராஜவெலயில் உள்ள காணியிலிருந்து அகழ்ந்து எடுத்த மணலின் பொருட்டும் அக்காணியைப் பயன்படுத்தியதன் பொருட்டும் 05 ஆண்டுகளாக அந்த நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய முறையே ரூபா 180 மில்லியன் மற்றும் ரூபா 171 மில்லியன் தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஐ) 2011 முதல் வெளிநாட்டுக் கம்பனி ஒன்றிற்குக் கூட்டுத்தாபனம் செலுத்த வேண்டியிருந்த 575,000 யூரோவைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாகவும் காலப்பகுதியின்போது ஏற்பட்ட சாதகமற்ற அந்நியச் செலாவணி வேறுபாடுகளாலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை ரூபா 90.78 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ஒப்பந்தக் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 385.76 மில்லியனாக காணப்பட்டதுடன், அவற்றுள் 2 முதல் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட தீர்க்கப்படாத மீதி ரூபா 52.48 மில்லியன் ஆகும்.

(ஓ) கூட்டுத்தாபனத்தால் உப ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 97.49 மில்லியனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அவற்றுள் 2 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா 23.57 மில்லியன் ஆகும்.

(ஔ) கூட்டுத்தாபனத்தால் பணி முடிவுறுத்தப்பட்ட ஒப்பந்தங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக பெற வேண்டிய பிடிகாசு பெறுமதியான (Retention) ரூபா 169.65 மில்லியனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அவற்றுள் 2 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா 52.67 மில்லியன் ஆகும். அது மொத்த பெற வேண்டிய பிடிகாசு பெறுமதியில் 30 சதவீதமாகும்.

(க) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்த தொழிலாரம்பிப்பு முற்பண மீதியான ரூபா 744.92 மில்லியனை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அவற்றுள் 2 வருடங்களை விஞ்சிய பெறுமதி ரூபா 355.54 மில்லியன் ஆகும். அவ்வாறே மீள செலுத்த வேண்டிய விலைக்கேள்வி வைப்புக்களின் பெறுமதி ரூபா 65.09 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் ஒரு வருடத்தை விஞ்சிய மீதிகள் ரூபா 24.10 மில்லியன் ஆகும்.

(கா) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனத்தின் வேலைத்தளங்களுக்கு தேவையான மின்சாரத்தினை பெற்றுக்கொள்வதற்காக செலுத்தப்பட்டிருந்த வைப்புக்கள் ரூபா 2.47 மில்லியன், அந்த செயற்திட்டங்களின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1968 இன் 15 ஆம் இலக்க இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டம் | |
| (i) 2 (ஆ) 1 ஆம் பிரிவு | தீவடங்கிலும் மாகாண மட்டத்தில் அமைந்துள்ள தாழ்ந்த நிலத்தில் நீரைக் கொண்டிருக்கும் காணிகள், ஊற்றுக்கள் அல்லது சேற்றுக் காணிகளை இனங்கண்டு அத்துமீறிய காணி நிரப்புதலைக் கட்டுப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும் இயலுமானவாறு அவற்றை வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் பிரசித்தப்படுத்துவதும் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு அவ்வாறு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட மாகாணங்களது எண்ணிக்கையின் வரம்பு 04 க்கு உட்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ii) 8 (அ) ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் மீட்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமெனச் சுவீகரிக்கப்படும் காணிகள், கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு, கைத்தொழில், வணிக மற்றும் விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு செப்பனிடப்பட வேண்டுமாயினும், அவ்வாறாக 1995 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தால் சுவீகரிக்கபட்ட 307 ஏக்கர் முதுன் எல மற்றும் முத்துராஜவெல மற்றும் காணிகளில் மீளாய்வாண்டின் இறுதியல் உள்ளபடியாக அபிவிருத்தி செய்த காணியின் அளவு 92 ஏக்கர் அதாவது 30 சதவீதமான குறைந்த அளவாகும். |
| (ஆ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11(ஆ) பிரிவு | நிதி அமைச்சரது இணக்கப்பாடின்றி பணிப்பாளர் சபையினது அங்கீகாரத்துடன் நிலையான மற்றும் குறுகிய கால வைப்புக்களில் ரூபா 3,333.82 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) 1982 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச் சபை (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 8 ஏ பிரிவு | குறித்த உள்ளூராட்சி நிறுவகத்தினது அங்கீகாரமின்றி கூட்டுத்தாபனத்தினால் புதிய தலைமை அலுவலகக் கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, எதிர்வரும் ஆண்டுகளில் அங்கீகாரம் பெறப்படுவதற்கான ரூபா 12.04 மில்லியன் அளவான பொறுப்பு உருவாகியிருந்தது. |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 571 | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக 05 வருடங்களை விஞ்சிய 14 ஒப்பந்தங்களின் பிடிகாசு தொகையான (Retention) ரூபா 9.47 மில்லியனை நிதிப்பிரமாணத்திற்கமைய தீர்ப்பனவு செய்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 700(3) | நிதிப்பிரமாணத்திற்கு முரணாக 2016 ஆம் ஆண்டின் போது பொருட்களை கைத்தவிர்க்கும் போது தெரிவு செய்யப்படாத 23 விலைக்கேள்வியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 365,000 தொகையான வைப்புப் பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 774 | மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் கைத்தவிர்ப்பதற்காக மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,631,490 தொகையான 100 பொருள் உருப்படிகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அந்த பொருட்களை கேள்வி கோரல் மூலம் விற்பனை செய்வதற்காக வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிராததுடன், அதற்காக மதிப்பாய்வுச் சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | 1993 நவம்பர் 26 ஆந் திகதிய 794/23 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி | கூட்டுத்தாபனம் அகழ்ந்தெடுத்த 4,478,679 கியூபிக் மீட்டர் கடல் மணலுக்கு ரூபா 135.45 மில்லியன் அரசிறையாக வழங்கப்பட வேண்டியிருந்தது. எனினும், மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த அரசிறை ரூபா 32.05 மில்லியன் மாத்திரமேயாகும். |
| (உ) | 1995 யூலை 12 ஆந் திகதிய எஸ்ஈ1/ஏ/4/34 ஆம் இலக்க அரசாங்க காணிகளை சுவீகரிக்கும் வழிகாட்டி | (i) சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் இறுதியளவில் 93.15 பேர்ச் பரப்பளவான அரச காணிகள் தனியார் துறைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், காணிகளை குத்தகைக்கு வழங்கும் போது தலைமை மதிப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யப்பட்ட குத்தகைப் பெறுமதி விசேட குழுவொன்றினால் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) அவ்வாறே கூட்டுத்தாபனத்தினால் 2007 ஆம் ஆண்டின் போது வீடமைப்பு செயற்திட்டமொன்றினை நிர்மாணிப்பதற்காக கூட்டுத்தானத்திற்கு சொந்தமான காணியொன்று விற்பனை உடன்படிக்கையொன்றின் அடிப்படையில் தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கம்பனி அந்த வீடமைப்பு செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்காமையால், அந்த காணியை மீண்டும் கூட்டுத்தாபனத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | சுற்றிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தானத்தினால் மீளாய்வாண்டின் போது கைதவிர்க்கப்பட்ட ரூபா 1,200,000 மதிப்பீட்டு பெறுமதி கொண்ட 17 வாகனங்களின் தகவல்கள் பொது திறைசேரிக்கு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், கைத்தவிர்க்கப்பட்ட வாகனங்களின் விற்பனை வருமானம் திரண்ட நிமியத்திற்குக செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது 21 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 இனை விஞ்சி ரூபா 5,819,819 தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த முற்பணங்களிலும் ரூபா 1,452,500 தொகை 10 நாட்களுக்குள் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 82,316 ஆகும். |

| | | |
|---|---|---|
| (ஏ) | 2015 திசெம்பர் 09 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக பணிப்பாளர் சபையின் பரிந்துரையின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்காக ஊழியர் ஒருவருக்கு ரூபா 13,500 படியாக ரூபா 17,581,000 ஊக்குவிப்புப் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஐ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பிரிவு | திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரமே மீளாய்வாண்டின் போது பதவியணியினருக்கு ரூபா 39.26 மில்லியன் ஊக்குவிப்புப் படியாக வழங்கப்பட்டிருந்தது. |
| (ஒ) | 2013 மார்ச் 15 ஆந் திகதிய ரீஏ/பொது/2013/14 ஆம் இலக்க வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் சுற்றறிக்கை | சுற்றறிக்கைக்கமைய வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்குபற்றும் உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்ட பயிற்சி தொடர்பான அறிக்கையொன்றை நாட்டிற்கு திரும்பி ஒரு மாதத்திற்குள் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு வழங்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் 32 உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியிருந்த போதிலும், அவ்வாறானதொரு அறிக்கையினை வழங்கியிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது தொகுதியினதும் கூட்டுத்தாபனத்தினதும் வரிக்கு பின்னரான இலாபம் முறையே ரூபா 729.95 மில்லியன் மற்றும் ரூபா 702.56 மில்லியன் ஆகவிருந்ததுடன், இதற்கெதிரான முன்னைய ஆண்டின் நட்டம் முறையே ரூபா 91.56 மில்லியன் மற்றும் ரூபா 157.39 மில்லியன் என்பனவாகும். இதற்கமைய முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் தொகுதியினதும் கூட்டுத்தாபனத்தினதும் நிதி விளைவுகளில் முறையே ரூபா 821.51 மில்லியன் மற்றும் ரூபா 859.95 மில்லியன் அதிகரிப்பினை காட்டியது. வேரஸ் கங்கை மழைநீர் கால்வாய் செயற்திட்டத்திற்காக பொது திறைசேரியிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,332.94 மில்லியன் பிற்போடப்பட்ட வருமானம் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் வருமானமாக காண்பிக்கப்பட்டமையால் நிதி விளைவுகளின் அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் கூட்டுத்தாபனத்தின் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2012 ஆம் ஆண்டின் ரூபா 68.17 மில்லியன் நட்டமொன்று நிலவிய போதிலும், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 103.89 மில்லியன் மற்றும் ரூபா 346.69 மில்லியன் இலாபம் ஈட்டப்பட்டிருந்தது. மீண்டும் 2015 ஆண்டு அது ரூபா 157.39 மில்லியன் பற்றாக்குறையாக ஆகியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போதான இலாபம் ரூபா 702.56 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், ஊழியர்களது ஊதியம், அரசிற்கு செலுத்திய வரி, நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றை நிதி விளைவுகளுக்கு மீள சீராக்கும் போது கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு 2012 ஆம் ஆண்டு தொடக்கம் சார்பு மிக்க பெறுமதியாகத் தொடர்ந்து அதிகரித்து மீளாய்வாண்டில் ரூபா 1,337.39 மில்லியன் ஆகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2006 இன் 35 ஆம் இலக்க இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், மீட்பதற்கும் அபிவிருத்தி செய்யப்படுவதற்குமான பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள காணிகளை மீட்பதும் அபிவிருத்தி செய்வதும் அக் காணிகள், கட்டிடங்கள் என்பவற்றைக் கைத்தொழில், வணிக அல்லது விவசாய நடவடிக்கைகளுக்கு உகந்தவாறு செய்தலும் அக் காணிகளது பொறுப்புடைமை, முகாமைத்துவம், நிர்வாகம், அக் காணிகளை மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்தலுக்குட்பட்டு அதற்குப் பொறுப்பாக இருத்தல், பொறியியல் துறை நிர்மாண வேலை நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகளைப் பொறுப்பேற்றல், கால்வாய் வழிகளைப் பொறுப்பேற்றல், அபிவிருத்தி, பராமரிப்பு, நிர்வாகம் மற்றும் கால்வாய்ப் பாதை மாசு படுவதைத் தவிர்ப்பது என்பன கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கமும் பணியுமாகும். இந்நோக்கங்களை ஈடேற்றுவதிலான முன்னேற்றம் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1996 ஆம் ஆண்டின் போது அமைச்சரவையின் தீர்மானமொன்றின் அடிப்படையில் கொழும்பு பெரும்பாக வெள்ளநீர்க் கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் செயற்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலின் கீழ் பாராளுமன்ற கட்டிடத்தொகுதியின் மேற்கு எல்லையில் அமைந்துள்ள சுமார் 1000 ஏக்கர் பரப்பளவான தாழ்வான சதுப்பு நிலப்பகுதி நீர் தேங்கி நிற்கும் பிரதேசமாக பாதுகாப்பதற்காக மற்றும் கட்டுப்படுத்தவதற்காக அது தொடர்பான நிபுணத்துவ நிறுவனமான இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு கையளிக்கப்பட்ட காணிகளில் அத்துமீறிய குடியேற்றங்கள், அத்துமீறிய நில மீட்டல்கள் ஆகியவற்றை அகற்றும் முழுப் பொறுப்பும் (Sole Responsibility) கூட்டுத்தாபனத்திற்கு சாட்டப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றுள் சுமார் 200 ஏக்கர் அத்துமீறிய குடியிருப்போரால் கைப்பற்றப்பட்டிருந்ததுடன் மேலும் சுமார் 200 ஏக்கர் பரப்பளவான காணி கூட்டுத்தாபனத்தினால் அகற்றப்பட்டிருந்தமையின் (Divesting) செய்யப்பட்டிருந்தமையின் காரணத்தால் அமைச்சரவையால் கூட்டுத்தாபனத்தினால் எதிர்பார்க்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. மேற்படி பிரதேசங்கள் இழப்பிற்குள்ளானமைக்கு ஒப்பாக மழைநீர் வடிந்தோடும் இயலுமையை (Out Fall Capacity) அதிகரிப்பதற்கு கூட்டுத்தாபனம் போதியளவு நடவடிக்கை எடுக்காமை நீர் நிரம்பி வழிவதற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. அவ்வாறே அத்துமீறி குடியிருப்போர் வசிக்கும் காணிகளின் எல்லைகளை மீளமைப்பதற்கு 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டினது இறுதியில் உள்ளவாறு 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள நீர் தேங்கும் இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள 673 அத்துமீறிய நிர்மாண வேலைகளையும் மீட்புகளையும் இனங்கண்டிருந்தபோதும் இவ்வாறு இனங்காணப்பட்ட நிர்மாணிப்புகளை அகற்றுவதற்குப் போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(இ) முத்துராஜவெல நீர்க் காணிகள் தொடர்பாக நீர்க் காணிகளுக்கான முகாமைத்துவத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்குப் பொதுத் திறைசேரியினால் மீளாய்வாண்டின் போது ரூபா 30 மில்லியன் ஒதுக்கீடு செய்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன், அத்திகதியில் உள்ளபடியான பௌதீக செயன்முன்னேற்றம் 24 சதவீதமாக காணப்பட்டது.

(ஈ) கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 361.87 மில்லியனிலான 13 செயற்திட்டங்களை அமுலாக்குவதற்குத் திட்டமிட்ட போதும், அச் செயற்திட்டங்களை அமுல்படுத்தாது செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்காத 14 செயற்திட்டங்களை அமுலாக்குவதற்கு மீளாய்வாண்டின் போது செலவழித்திருந்த தொகை ரூபா 626.13 மில்லியன் ஆகும்.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக தியன உயன பப் (Pub) கூடத்தை நிர்மாணிப்பதற்கென ரூபா 14.61 மில்லியன் செலவழிக்கப்பட்டு, அதன் செயல் முன்னேற்றம் 34 சதவீதமாக இருக்கையில் அந்நிர்மாண வேலை கைவிடப்பட்டிருந்தது. வேலையைக் கைவிட்டதற்கான காரணம் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், கூட்டுத்தாபனத்தினால் ஆரம்ப சாத்தியவள கற்கையொன்றினை மேற்கொள்ளாது ரூபா 33.32 மில்லியன் செலவிடப்பட்டு முன்னைய ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட தியத உயன புகையிரத சிற்றுண்டிச்சாலை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், சிற்றுண்டிச்சாலையின் பெசன்ஜர் யுனிட் மற்றும் புட் ஸ்டோர்ஸ் ஆகியனவற்றை பயன்படுத்த முடியாத விதத்தில் சிதைவிற்குள்ளாகியிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் புதிய வியாபார முன்மொழிவாக கூட்டுத்தாபனத்திற்குரிய கிரிமண்டல மாவத்தையில் மற்றும் ராகம காணிகளில் 02 வீடமைப்புத் திட்டங்களை நிர்மாணிப்பதற்கு கூட்டுத்தாபனத்தின் திட்டங்கள் மற்றும் வியாபார அபிவிருத்தி பிரிவினால் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2017 யூலை மாதம் வரையிலும் அந்த வீடமைப்புத் திட்டங்களுக்குரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கொழும்பு தலைநகர நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டின் போது 19 ஒப்பந்தங்கள் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அந்த ஒப்பந்தங்கள் 2019 ஆம் ஆண்டின் போது நிறைவு செய்யப்பட வேண்டியதாக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக அவற்றுள் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 03 ஆக இருந்ததுடன், ரூபா 523.95 மில்லியன் பெறுமதியான 04 ஒப்பந்தங்களின் பணிகள் நடைபெற்றவாறு இருந்தன. அவற்றின் பௌதீக செயன்முன்னேற்றம் 25 சதவீதமான குறைவான பெறுமதியினை கொண்டிருந்ததுடன், ஏனைய 12 ஒப்பந்தங்கள் ஆரம்ப திட்டமிடல் கட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறே செயற்திட்டத்தின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 14,733 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் இறுதியில் உள்ளபடியாக செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 3 ½ வருடங்கள் கடந்திருந்த போதிலும், பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட நிதியேற்பாடு பெறுமதி ரூபா 1,253 மில்லியன் அல்லது ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டுப் பெறுமதியில் 8.5 சதவீதம் மாத்திரமாகும்.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தியன உயன புகையிரத சிற்றுண்டிச் சாலை அமைந்துள்ள காணியின் சட்டபூர்வ உரித்தை கூட்டுத்தாபனத்திற்கு சுவீகரிப்பதற்குக் நடவடிக்கை எடுக்காமையால், சிற்றுண்டிச் சாலை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக வெளிநபர்களுடன் சட்டபூர்வ உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதில் தடை ஏற்பட்டிருந்தது. மேலும், இக்காணியை நகர அபிவிருத்தி அதிகாரசபை எதிர்காலத்தில் தனது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குச் சுவீகரித்துக் கொள்வதற்கான அபாயகரமான நிலையொன்றும் ஏற்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் புறக்கோட்டை 09 ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள ஏறக்குறைய 05 ஏக்கர் காணியில் சிறந்த வீடமைப்புக் கூட்டுத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கு 2007 ஆம் ஆண்டில் அபிவிருத்தியாளர் ஒருவருடன் விற்பனை உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அது 2010 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாகும். இக்காணியை அபிவிருத்தி செய்வதற்கு அபிவிருத்தியாளரிடமிருந்து ரூபா 489 மில்லியன் முற்பணமாகப் பெறப்பட்டிருந்தது. எனினும், 2017 யூன் 30 ஆந் திகதி வரை குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க அபிவிருத்தியாளர் நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் குறித்த உடன்படிக்கையை இரத்துச்செய்யாமையால் மீண்டும் இந்த காணியை பொருத்தமான அபிவிருத்தியாளர் ஒருவருக்கு கையளிப்பதற்கு உள்ள சந்தர்ப்பத்தினை கூட்டுத்தாபனம் இழந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு வெள்ளைத் தாமரை வீடமைப்புச் செயற்திட்டத்தின் குடியிருப்போரிடமிருந்து பெற வேண்டியிருந்த தவணைப் பணத்தினதும் வட்டியினதும் நிலுவைத் தொகையான ரூபா 20.56 மில்லியனை அறவிடுவதற்கு உடன்படிக்கை நிபந்தனைக்களுக்கமைய கூட்டுத்தாபனத்தினால் எதுவித சட்டரீதியான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிராததுடன், அத்தொகையில் ரூபா 20.15 மில்லியனுக்கு அறவிட முடியாக்கடன் ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் புதிய வியாபார தேவைப்பாடுகளை தீர்மானிப்பதற்கும், நிலவும் சந்தைப் பங்கினை விரிவுபடுத்தும் தேவைப்பாட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் திட்டமிடல் மற்றும் வியாபார அபிவிருத்தி பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பிரிவினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் எவை என்பது இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(உ) கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள கித்தம்பஹுவ வாய்க்கால் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தினுள் அமைந்துள்ள 05 காணித்துண்டுகள் வருடாந்த குத்தகை வாடகை அடிப்படையில் குத்தகையாளருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் 2012 ஆம் ஆண்டு முதல் அவர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிராததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக அறவிடப்படாத குத்தகை வாடகை வருமானம் ரூபா 2.92 மில்லியன் ஆகும்.

(ஊ) கூட்டுத்தாபனத்தின் கதிர்காமம் மற்றும் நுவரெலியா சுற்றுலா சுற்றுலா விடுதிகள் மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 3.45 மில்லியனாக காணப்பட்ட போதிலும், அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 6.62 மில்லியன் ஆனமையால் மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட நட்டம் ரூபா 3.17 மில்லியன் ஆகும். செலவினத்திற்கு பொருத்தமான கட்டண முறைமையொன்றினை இனங்காணுவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தமை இந்த நிலைமைக்கு தாக்கமளித்திருந்தது.

(எ) கொழும்பு தலைநகரை அண்மிய நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் 2014 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த ஜீப் வண்டி மீண்டும் அந்த செயற்திட்டத்தால் எடுத்துச் செல்லப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதனை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) லுணாவ செயற்திட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனத்தின் பணிகளுக்காக 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட 02 வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் நீர் வழங்கள் அமைச்சின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அந்த வாகனங்களை கூட்டுத்தாபனத்திற்கு மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2013 ஆம் ஆண்டின் பின்னர் இந்த வாகனங்கள் தொடர்பில் கூட்டுத்தாபனத்தினால் எந்த பின்தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வு பரிசோதனையின் போது கூட்டுத்தாபனத்தினால் வேலைத்தளங்களிலுள்ள இயந்திர மற்றும் உபகரணங்களுக்காக எரிபொருள் விநியோகிக்கும் செயன்முறை தொடர்பான பொருத்தமான மேற்பார்வையொன்று இடம்பெறுவதில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக மீளாய்வாண்டினுள் ரூபா 10.96 மில்லியன் பெறுமதியான 115,268 லீட்டர் எரிபொருள் முறையற்ற பாவனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனத்தின் 57 வாகனங்கள் போக்குவரத்துப் பிரிவின் உத்தியோகத்தரின் மேற்பார்வையின்றி ஒவ்வொரு பிரிவுகளில் ஓட்டத்தில் ஈடுபட்டிருந்தது. இந்த நிலைமையின் அடிப்படையில் குறித்த வாகனங்கள் போதியளவு ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிராத போது கூட்டுத்தாபனத்தின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக 25 வாடகை வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டு அதற்காக ரூபா 4.84 மில்லியன் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(ஓ) தற்போது இடம்பெறும் அத்துமீறிய நிலமீட்டல்களை தடுப்பதற்காக கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தில் நிலவும் ஏற்பாடுகள் போதியளவானதாக இல்லாதிருந்தமையால், அந்த பிரிவுகள் திருத்தப்பட்டு அதிகாரச்சட்டத்தினை திருத்தவதற்காக 2012 ஆம் ஆண்டின் போது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரச்சட்டத்தினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அதிகாரச்சட்டத்தில் நிலவும் இவ்வாறான குறைபாடுகளின் அடிப்படையில் கடந்த வருடங்களில் அத்துமீறிய நில மீட்டல்கள் தொடர்பில் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கும் புகார்கள் தொடர்பில் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொலன்னாவ சாலமுல்ல வீடமைப்பு நிர்மாண வேலை (ஏபீசீ கட்டிடம்) தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஏறக்குறைய 04 ஏக்கர் காணி பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அக்காணியினது பெறுமதியான ரூபா 171 மில்லியன் தொகையினை நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 1981 முதல் 2005 வரையான காலப்பகுதியினுள் கூட்டுத்தாபனம் சுவீகரித்திருந்த காணிகளுக்குரிய இழப்பீட்டை அவ்வப்போது கொடுப்பனவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையால் அக்காணிகளுக்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த இழப்பீட்டுத் தொகை ரூபா 90.72 மில்லியன் ஆகியிருந்தது. அத்துடன், அதற்கான செலுத்த வேண்டிய வட்டித் தொகை ரூபா 103.06 மில்லியன் அல்லது கொடுப்பனவு செய்ய வேண்டிய இழப்பீட்டுத் தொகையின் 113 சதவீதமாகும். குறித்த இழப்பீட்டுத் தொகையை வழங்குவதனை துரிதப்படுத்தப்பட்டு வட்டி செலுத்துவதைக் குறைத்துக் கொள்ளும் விதத்தில் பிரதேச செயலகங்களுடன் சிறப்பாக ஒத்துழைக்காமை இந்நிலை உருவாகுவதற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. அவ்வாறே காணிச் சுவீகரிப்பிற்கு 11 முதல் 35 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்தமையால் இந்த காணிகளில் அத்துமீறிக் குடியிருப்போர் வசிப்பதும் மேலும் தெரிய வந்தது.

(இ) ஏக்கல மடம சந்தி, வாலுகாராம விகாரையுடன் தொடர்புடைய 04 ஏக்ககர் காணி அத்துமீறி நிலமீட்டலுக்கு உட்படுத்தப்படுவதாகவும், அது தொடர்பில் துரிதமாக நடவடிக்கை எடுக்குமாறு ஜா - எல பிரதேச செயலாளர் 2016 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளருக்கு அறிவித்திருந்தார். இது தொடர்பில் பொது முகாமையாளர் வழங்கிய அறிவுரைக்கமைய கூட்டுத்தாபனத்தின் பாதுகாப்புப் பிரிவு மேற்படி திகதியே தளப்பரிசோதனையொன்றினை மேற்கொண்டு, அந்த பரிசோதனை அறிக்கையினை 2016 ஆகஸ்ட் 12 ஆந் திகதி பொது முகாமையாளருக்கு கையளித்திருந்ததுடன், காணிகளை அத்துமீறி நிலமீட்டல் செய்த நபருக்கு 2016 ஆகஸ்ட் 18 ஆந் திகதி கூட்டுத்தாபனத்திற்கு வருகைதருமாறு பணிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 ஆகஸ்ட் 08 ஆந் திகதி முதல் 11 ஆந் திகதி வரையிலும் மேற்படி அத்துமீறிய நிலமீட்டல் தொடர்பில் ஊடக நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் பொது மக்களூடாக அதிக எண்ணியிலான புகார்கள் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருந்த போதிலும், உடனடியாக பரிசோதனையொன்றினை மேற்கொள்ளாது தளப் பரிசோதனையிலிருந்து 10 நாட்களுக்கு பின்னர் புகார்களை பரிசீலிக்குமாறு பணிக்கப்பட்டிருந்தமையால், அந்த காலப்பகுதியினுள் காணிகளை முழுமையாக அத்துமீறிய நிலமீட்டலுக்கு உட்படுத்துவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. புகார்களை விசாரிப்பதற்கு நீண்ட காலம் கடந்தமை, தொடர்ச்சியாக தளப்பரிசோதனைகளை மேற்கொள்ளாமை, பரிசோதனை அறிக்கைகளை வழங்குவதிலான தாமதங்கள் மற்றும் துரிதமான சட்ட நடவடிக்கை எடுக்கப்படாமை போன்றவற்றின் காரணமாக காணி உரிமையாளர்களின் விருப்பத்தற்கு ஏற்றவாறு காணிகள் அத்துமீறிய நிலமீட்டலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(ii) இந்த முறைப்பாடு கிடைக்கப்பெற்று ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் கடந்த பின்னர், அதாவது, 2016 செப்தம்பர் 14 ஆந் திகதி மேற்படி நிலமீட்டல் தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் சதுப்பு நில முகாமைத்துவ பிரிவின் தளப்பரிசோதனை அறிக்கையொன்றினை (Inspection Report) வழங்கியிருந்த போதிலும், அந்த அறிக்கையில் அத்துமீறி நிரப்பப்பட்ட அளவு மற்றும் எல்லைகளும், மழைநீர் வடிந்தோடுவதற்குமான வழிகள் மற்றும் வெள்ள நிலைமையொன்றின் போது ஏற்படும் தாக்கங்கள் இனங்காணப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், வெள்ளநீர் சுழற்சி (Storm Water Behaviour and Flood Vulnerability) தொடர்பான பகுப்பாய்வொன:றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த நிலமையின் அடிப்படையில் அறிக்கையினை பரிசீலிக்கும் வெளிவாரி தரப்பினருக்கு (விஷேடமாக நீதிமன்றத்திற்கு) அத்துமீறிய நிலம்மீட்டல்கள் காரணமாக ஏற்படக்கூடிய சேதம் போதியளவான அறிவொன்று கிடைக்காது என்பது கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(iii) அவ்வாறே 2016 ஒக்தோபர் 14 ஆந் திகதி அல்லது புகார் கிடைக்கப்பெற்று 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்ததன் பின்னர் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் அதிகாரங்களுக்கமைய அத்துமீறிய நிலமீட்டல் தொடர்பில் கூட்டுத்தாபனம் வழக்குத் தாக்கல் செய்திருந்த போதிலும், விடயத்திற்குரிய காணி ஜா – எல நகரசபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள தாழ்வான, சதுப்பு, சேற்று அல்லது வரண்ட இடமொன்றாக உறுதிப்படுத்துவதற்கும், அத்துமீறிய நிலமீட்டல் காரணமாக பிரதேசத்தில் மழைநீர் வடிந்தோடுதல் மற்றும் வெள்ளநீர் சுழற்சி போன்ற பாதகமான தாக்கங்களையும் விபரிப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியமையின் அடிப்படையில் நீதிமன்றத்தால் வழக்கு புறக்கணிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான நலிவுகள் அத்துமீறிய நிலமீட்டல்களை தடுப்பதற்கு தடையாக அமைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கைத்தவிர்ப்பதற்கு இனங்காணப்பட்ட 100 பொருட்கள் உபகரண உருப்படிகளில் 42 உருப்படிகள் கைத்தவிர்க்கப்படாது களஞ்சியத்தில் தக்கவைக்கப்பட்டிருந்தன.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தினது நோக்கங்களுக்கு முரணாக 2014 ஆம் ஆண்டின் போது ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் முன்னாள் அரசியல்வாதி ஒருவரின் ஞாபகார்த்த பழம் பொருள் காட்சியகத்துடன் கூடிய நினைவுச் சின்னம் ஒன்றை அம்மாவட்டத்தில் அமைப்பது தொடர்பாகக் கூட்டுத்தாபனத்திற்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 31.31 மில்லியன் பிரபல்யமான கலைஞர்களது பல்வேறு நிகழ்ச்சிகளினூடாகச் சேகரிக்கப்பட வேண்டியபோதும், மீளாய்வாண்டு முடிவளவிலும் அவ்வாறாகப் பணம் சேகரிக்கப்படவில்லை.

அத்தொகைக்குப் புறம்பாக, கூட்டுத்தாபனம் நிர்மாணப் பணிகளுக்கான பொருட்களைப் பெறுவதற்கு இலங்கை கடற்படைக்கு ரூபா 25 மில்லியன் முற்பணமாக வழங்கியிருந்ததுடன், மீளாய்வாண்டு முடிவளவிலும் அம் முற்பணத்தில் ரூபா ஒரு மில்லியன் தொடர்ந்தும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(ஆ) உலக வங்கியின் உதவியுடன் அமுலாகும் கொழும்பு நகர அபிவிருத்திச் செயற்திட்டம் தொடர்பாக மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் செலவழித்திருந்த ரூபா 46.36 மில்லியன் செயற்திட்டச் செலவினத்தை குறித்த செயற்திட்டத்திலிருந்து மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(இ) கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது கைத்தவிர்ப்பதற்கு திட்டமிடப்பட்ட மற்றும் தர அறிக்கைகளை பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்ட 09 வாகனங்களின் நிலமை அறிக்கைகளை (Condition Report) பெற்றுக்கொள்ளாது விலைக்கேள்வி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொழும்பு பெரும்பாக வெள்ள நீர் கட்டுப்பாட்டு மற்றும் சுற்றாடல் முன்னேற்ற செயற்திட்டத்தின் கீழ் நீர் தங்கி நிற்கும் பிரதேசங்களாக ஒதுக்கி வைப்பதற்கு கூட்டுத்தாபனத்தினால் சுவீகரிக்கப்பட்ட நாவல ஹுன் எல நீர் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தினுள் காணப்பட்ட 02 ஹெக்டெயர்கள் பரப்பளவான காணியில் கிரிக்கெட் மைதானமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(உ) வேரஸ் கங்கை மழைநீர் கால்வாய் மற்றும் சுற்றாடல் முன்னேற்ற செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது கையளிக்கப்பட்ட 07 ஒப்பந்தங்களுக்காக தொழிலாளரம்பிப்பு முற்பணமாக ரூபா 37.31 மில்லியன் உப குத்தகையாளருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த உள்ளகப் பட்டியலிருந்து அறவிடப்பட வேண்டிய 10 சதவீதமான தொழிலாளரம்பிப்பு முற்பணங்களின் பெறுமதியினை அறவிடுவதற்கு ஆண்டினுள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உப ஒப்பந்தகாரர்களின் செய்வேலை சான்றுறுதிப்படுத்தப்படாததும் அளவிடைப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளாமலும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 22.20 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.5 வெளிப்படையான மோசடிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற திறைசேரி செயற்திட்டங்களுக்குரிய கிரயத்தினுள் கூட்டுத்தாபனத்தின் பொதுப்பணி செலவினங்களும் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,296.80 மில்லியன் மூலதன மானியங்களிலிருந்து முறையான அங்கீகாரமின்றி ரூபா 1,042.38 மில்லியன் அல்லது 45 சதவீதம், கூட்டுத்தாபனத்தின் பொதுப்பணி செலவினமாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு அறவிடப்படும் பெறுமதி கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாபமாகும் என்பது கணக்காய்வின் போது தொடர்ந்தும் வெளிப்படுத்தப்பட்டது. அந்த பெறுமதி கூட்டுத்தாபனத்தில் மொத்த வருமானத்தின் சதவீதமாக 69 சதவீதமாக இருந்தது. அதற்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட சம்பளம் மற்றும் படிகளின் பெறுமதியில் 40 சதவீதம் திறைசேரி மானியங்களால் மீளளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டினுள் அமைச்சின் மானியத்தின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்ட 03 செயற்திட்டங்களுக்காக செய்வேலையை சான்றுறுதிப்படுத்தாது உள்ளக பட்டியல்கள் மாத்திரம் முன்வைக்கப்பட்டு ரூபா 88.12 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) ஹோட்டல் கம்பனியொன்றிடமிருந்து கூட்டுத்தாபனம் பெற்றுக்கொண்டிருந்த சேவைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டிய ரூபா 1,568,248 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிராததுடன், பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகள் பற்றிய விபரங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தில் ஐந்து சட்டத்தரணிகளை கொண்ட சட்டப் பிரிவு ஒன்று காணப்பட்ட போதிலும், சட்ட செலவினமாக வெளிவாரி சட்டத்தரணி ஒருவருக்கு மீளாய்வாண்டின்போது ரூபா 1.82 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் மாதாந்த வாடகை ரூபா 105,000 மற்றும் ஆகக்கூடிய ஓட்டக் கிலோமீட்டர்கள் 1500 இற்கு மேற்பட்ட ஓட்டத்திற்காக ஒரு கிலோ மீட்டருக்கு ரூபா 75 படி செலுத்தும் அடிப்படையில் 10 கெப் வண்டிகள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அவற்றுள் 08 வாகனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது அந்த வாகனங்கள் மாதாந்த ஓட்டம் 2000 முதல் 3000 கிலோ மீட்டர்களுக்கு இடைப்பட்டதாக காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது. எனினும், கூட்டுத்தாபனத்தினால் மாதாந்தம் ஓட்டத்தில் ஈடுபடுத்தக்கூடிய ஆகக்கூடிய கிலோ மீட்டர்களான 1,500 கிலோ மீட்டர்கள் எல்லையினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் உச்ச எல்லையினை மிகைத்து மேலதிகமாக ஓட்டத்தில் ஈடுபட்ட 35,502 கிலோ மீட்டர்களுக்காக ரூபா 2.57 மில்லியன் செலுத்த நேர்ந்திருந்தது. மேலும், கூட்டுத்தாபனத்திற்கு சாதகமான முறையில் குறித்த வாடகை வாகனங்களின் மாதாந்தம் ஓட்டத்தில் ஈடுபடுத்தக்கூடிய எல்லைகளை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கொழும்பு பெரும்பாக வெள்ள நீர் கட்டுப்பாட்டு மற்றும் சுற்றாடல் முன்னேற்ற செயற்திட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட 378 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணி 1998 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய 96/1760/111/125 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கமைய, குறுங்கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்காமையால், 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கூட்டுத்தாபனத்திற்கு சேகரிக்கக்கூடியதாக இருந்த பெருந்தொகையான வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

## 4.7 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் தியன உயன நிர்மாணப் பணிகள் முடிவடைய வேண்டிய திகதி இரண்டு வருடங்களை விஞ்சியிருந்த போதிலும், அதன் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிராததுடன் செயற்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் ரூபா 52.69 மில்லியன் அல்லது மதிப்பிடப்பட் பெறுமதியில் சுமார் 42 சதவீதம் மாத்திரம் ஆகும்.

(ஆ) கொலொன்னாவ, சாலமுல்லவில் 792 வீடுகளை அமைக்கும் (கட்டிடங்கள் பீ மற்றும் சீ) ஒப்பந்தத்தில் செய்த வேலைகளது பெறுமதி 653.02 மில்லியன் ஆகவிருந்த போதிலும், சான்றுறுதிப்படுத்தப்பட்ட பெறுமதி ரூபா 281.34 மில்லியன் ஆக இருந்ததுடன், எஞ்சிய செய்வேலைகளது பெறுமதியாகிய ரூபா 371.68 மில்லியன் இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் சான்றுறுதிப்படுத்தப்படாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் வேலையை நிறைவு செய்ய வேண்டிய ரூபா 340 மில்லியன் பெறுமதியான 04 ஒப்பந்தங்களது மீளாய்வாண்டு முடிவிலான பௌதீக முன்னேற்றம் 1 முதல் 24 சதவீதத்துக்கு இடைப்பட்ட குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தினால் உரிய நிதிசார் ஆய்வொன்றினை மேற்கொள்ளாதும் உரிய திட்டமொன்றின்றியும் பொல்கொட கால்வாயின் அணைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமையின் காரணத்தால் அந்த வாய்க்கால் அணைகள் உடைந்து விழுந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வாய்க்கால் அணைக்கட்டுக்களை மீள புனரமைப்பதற்காக ரூபா 950,000 செலவிடப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டினுள் கூட்டுத்தாபனத்தினால் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட 14 செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,156.50 மில்லியனான போதிலும், உள்ளபடியான செலவினம் ரூபா 274.40 மில்லியன் ஆனமையால் 76 சதவீதமான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் மேலும், 10 செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட கிரயத்தினை விஞ்சி ரூபா 943.54 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. பொருத்தமான ஆரம்ப கற்கையொன்றினை மேற்கொள்ளாது செயற்திட்ட திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக 05 வருடங்களை விஞ்சிய கூட்டுத்தாபனத்தினால் நிறைவேற்றப்பட்ட 08 ஒப்பந்தங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களின் பெறுமதியில் சேவை வழங்குனரால் உறுதிப்படுத்தப்படாத வேலைகளின் பெறுமதி ரூபா 35.90 மில்லியனாக இருந்ததுடன், 01 முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட 27 ஒப்பந்தங்களுக்காக பட்டியலிடப்பட்ட பெறுமதியில் உறுதிப்படுத்தப்படாத வேலைகளின் பெறுமதி ரூபா 646 மில்லியன் ஆகும். கூட்டுத்தாபனத்தினால் உரிய காலச்சட்டத்தினுள் பட்டியல்களை சமர்ப்பிக்காமை, ஆரம்ப திட்டம் மாற்றமடைதல் மற்றும் ஒப்பந்தங்களில் குறைபாடுகள் நிலவுவதற்கு நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் அடிப்படை சாத்தியவள கற்கையொன்றினை மேற்கொள்ளாது மாதின்னாகொட கிளை வீதியொன்றினை நிர்மாணிப்பதற்காக ரூபா 52 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், வீதியை நிர்மாணிப்பதற்கான தேவைப்பாடு கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சதுப்பு நிலமொன்றினை மீட்டி இந்த வீதி நிர்மாணிக்கப்படுவதால், நிரப்பப்படும் மண் தொடர்பில் பரிசோதனையொன்றினை மேற்கொண்டு சான்றுறுதியொன்றினை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனம் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை என்பது தளக் கணக்காய்வு பரசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஏ) 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய 13/1144/503/087 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி வேரஸ் கங்கை மழைநீர் வடிகால் மற்றும் சுற்றாடல் முன்னேற்றத்திற்கான செயற்திட்டத்தை ஆரம்பித்து அமுல்படுத்துவதற்காக தேசிய சேமிப்பு வங்கி மூலம் திறைசேரியின் பிணையுடன் கடனாக ரூபா 14,227 மில்லியன் கூட்டுத்தாபனத்திற்குக் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, கூட்டுத்தாபனம் 2014 ஜுலை 14 ஆந் திகதியன்று 14 ½ ஆண்டுகளுக்குள் கடனைத் திருப்பிச் செலுத்தும் இணக்கத்துடன் தேசிய சேமிப்பு வங்கியுடன் கடனுக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. நுகேகொடை, ரத்தனபிட்டிய, பொரலஸ்கமுவ, பிலியந்தலை மற்றும் வேரஹெர ஆகிய பிரதேசங்களில் மழைக் காலத்தில் ஏற்படும் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துதல், தற்போதுள்ள கால்வாய்களை அகலமாக்கல், கால்வாய் அணைகளின் பாதுகாப்பு, வெள்ளநீர் தேங்கும் இடங்களைப் பாதுகாத்து குளங்களை நிர்மாணித்தல், புதிய மதகுகளையும் பாலங்களையும் நிர்மாணித்தல் என்பன செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும்.

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஒக்டோபர் 04 ஆந் திகதி ஆரம்பமாகி 2018 ஒக்டோபர் 24 வரையான 5 ஆண்டுகளுக்குள் செயற்திட்டத்தை முடிவுறுத்த எதிர்பார்க்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் செயற்திட்டம் 03 ஆண்டுகளுக்கு மேலாகியதால், செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலத்துடன் ஒப்பிடப்படும்போது 60 சதவீதமான செயல்முன்னேற்றம் அறிவிக்கப்பட வேண்டுமாயினும், அத்தினத்தில் உள்ளவாறான உள்ளபடியான பௌதீக முன்னேற்றம் சுமார் 23 சதவீதம் எனக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடுகளின் மூலம் உறுதிப்படுத்தப்படுத்தபட்டதுடன், வலய இலக்கம் 3, 4, 6 ஆகியவற்றின் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் அசாதாரண கால தாமதத்தைத் தவிர்த்தவாறு குறித்த காலத்தில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யக்கூடிய புதிய வேலைத் திட்டமொன்றினை முகாமைத்துவம் அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக செயற்திட்டத்தால் 03 முதல் 06 மாதங்கள் எனும் குறுகிய காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 60 செயற்திட்டப் பணிகள் பொதிகளாக உப ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அவர்களுக்கு ரூபா 337,080,517 தொகையான தொழிலாரம்பிப்பு (Mobilization) முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. இவற்றுள் ஒரு வருட தாமத காலத்தினை விஞ்சிய ரூபா மீதிகளும் உள்ளடங்களாக தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 170,860,858 ஆகும். இதற்கமைய, செயற்திட்டம் கடன் மூலம் பெறப்பட்ட பணத்தை முற்பணமாக ஒப்பந்தகாரருக்கு வழங்கியதன் மூலம் அவர்களிடையே பணமானது அசாதாரண காலத்திற்கு கையிருப்பில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) செயற்திட்டத்திற்கெனப் பெறப்பட்ட கடனில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 444 மில்லியன் குறித்த நோக்கங்களுக்கு அப்பால் மீளக் கொள்வனவுக் கட்டளைகளில் (REPO) முதலீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த முதலீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 25.32 மில்லியன் வட்டி வருமானம் பெறப்பட்டு செயற்திட்டத்தின் பெறுவனவாக பதிவு செய்யப்படாது கூட்டுத்தாபனத்தின் வட்டி வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது

(iv) மீளாய்வாண்டின் இறுதியளவில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,798 மில்லியன் கடன் தொகைக்காக செலுத்த வேண்டிய கடன் வட்டி மற்றும் தவணைகளின் பெறுமதியான ரூபா 726.54 மில்லியன் கடன் உடன்படிக்கைக்கமைய உரிய திகதிகளில் செலுத்துவதற்கு கூட்டுத்தாபனம் தவறியமையின் அடிப்படையில், 2015 யூலை 28 ஆந் திகதி வங்கியால் கடன் பணத்தின் எஞ்சிய மீதியான ரூபா 11,429 தொகையான கடனை வழங்குதல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டம் உரிய முகாமைத்துவமின்றி செயற்பட்டமை இந்த நிலமைக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது.

(v) செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான கடன் தொகையின் எஞ்சிய மீதியான ரூபா 11,429 மில்லியனை பொது திறைசேரியினூடாக வழங்குவதற்கும் சேமிப்பு வங்கியிலிருந்து பெற்றுக்கொண்டுள்ள ரூபா 2,550 மில்லியன் கடன் தொகையின் தவணை மற்றும் வட்டியினை பகுதியாக செலுத்துவதற்கும் தேவையான பணத்தை திறைசேரியின் நிதிஒதுக்கீட்டின் மூலம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் 2016 யூலை 29 ஆந் திகதிய 2016/சீபீ/56 ஆம் இலக்க அமைச்சரவை பிரமாணக் குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மேற்படி செயற்திட்டத்தின் செலவினங்களை மேற்கொள்வதற்கு நிதியேற்பாடுகளை வழங்குவதற்கான இயலுமை இல்லாதிருப்பதாகவும், கூட்டுத்தாபனத்திற்கு வருடாந்தம் வழங்கப்படும் பாதீட்டு ஒதுக்கத்தினுள் செயற்திட்ட செலவினங்களை முகாமை செய்யப்பட வேண்டுமெனவும், அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. மேற்படி விடயங்களுக்கமைய செயற்திட்டம் முன்னோக்கி எவ்வாறு அமுல்படுத்தப்படும் என்பது தொடர்பில் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால், அது தொடர்பில் உரிய கவனம் செலுத்தி திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே செயற்திட்டத்தின் கீழ் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட வலயங்களில் (Zone) கால்வாய்களின் அருகில் வாழும் வீட்டுரிமையாளர்கள் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக தற்காலிகமாக அப்புறப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த விடயங்களின் அடிப்படையில் செயற்திட்டம் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்படாது விடின் பல்வேறு சூழல்சார் பிரச்சினைகளுக்கு கூட்டுத்தாபனம் முகங்கொடுக்க நேரிடும் என்பது தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது.

(vi) செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக தேவையான காணிகளை காணி சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் கீழ் சுவீகரிப்பதற்கு 2012 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக அந்த நடைமுறை ஆரம்பிக்கப்பட்டு 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும், காணி சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எந்தவொரு காணியையும் அரசிற்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், காணிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்ட காணிகளின் அளவு 267.67 ஹெக்டேயர்கள் ஆகும். எவ்வாறெனினும், ஆரம்ப கற்கையொன்றினை மேற்கொண்டு செயற்திட்டத்தின் நீழ் சுவீகரிக்கப்பட வேண்டிய காணிகளின்

அளவு எவ்வளவு என்பது இனங்காணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான காணிகளை சுவீகரிக்கும் செயற்முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) 2013 யூலை 08 ஆந் திகதிய அமப/13/0781/503/065 ஆம் இலக்க அமைச்சரவை தீரமானத்திற்கமைய செயற்திட்டத்தின் மூலம் பாதிப்பிற்கு உள்ளாகும் நபர்களின் கட்டிடங்கள் மற்றும் ஏனைய தீர்மானங்கள் மதிப்பிடப்பட்ட தொகையில் 80 சதவீதமான முற்பணம் செலுத்துவதற்கு முன்னர் அந்த தரப்பினருடன் ஒப்பந்தமொன்றினை கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது செலுத்தப்பட்ட முற்பணத் தொகை ரூபா 54.62 மில்லியனாக இருந்ததுடன், முற்பண எல்லையினை மிகைத்து மொத்த மதிப்பிடப்பட்ட தொகையான ரூபா 18.88 மில்லியன் சில நபர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

அவ்வாறு பாதிப்பிற்கு உள்ளாகும் நபர்களுக்கு சலுகைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது அதற்காக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் அவதானிப்புக்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென அமைச்சரவை தீர்மானித்திருந்த போதிலும், அவ்வாறு அவதானிப்புக்களை பெற்றுக்கொள்ளாது கூட்டுத்தாபனத்தினால் ரூபா 31.07 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(viii) ஆதனங்களின் உரித்தினை உறுதிப்படுத்தும் குழுவின் விதந்துரையினை பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனம் 12 உப குடும்பங்களுக்காக ரூபா 3 மில்லியன் நட்டஈடாக செலுத்தியிருந்தது.

(ix) கூட்டுத்தாபனத்தினால் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி அரச மதிப்பீட்டாளரின் நட்டஈட்டு அறிக்கையொன்றினை பெற்றுக்கொள்ளாமலும், பாதுகாப்பு காரணங்களின் அடிப்படையில் அகற்றப்படும் கட்டுமானங்கள் மற்றும் நிர்மாணங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக ரூபா 35.52 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(x) செயற்திட்டத்தின் ரத்னபிட்டிய கட்டு எல வீதியனை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் போது ரத்னபிட்டிய பழைய கெஸ்பேவ வீதியின் வியாபார நிலையத்திற்கு நுழைவதற்கு உள்ள பாலமொன்று உடைத்து அகற்றப்பட்டு, கால்வாய் அமைக்கப்பட்டதன் பின்னர், மீண்டும் அந்த பாலத்தினை நிர்மாணிப்பதற்கு செயற்திட்டத்தினால் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் மேற்படி பாலத்திற்காக ரூபா 1.84 மில்லியன் நட்டஈட்டு வியாபார உரிமையாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தினால் வாடகை வாகனங்களை பெற்றுக்கொள்ளும் போது ஆண்டின் ஆரம்பத்தில் கூறுவிலைகள் கோரப்பட்டு வாடகை வாகன வழங்குநர்கள் மற்றும் வாடகை வாகனங்களின் விலைகள் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், வாடகை உடன்படிக்கைகளை புதுப்பிக்கும் போது மீண்டும் போட்டி அடிப்படையிலான கூறுவிலைகள் கோரப்படாமல், முன்னர் தீர்மானிக்கப்பட்ட விலைகளுக்கே வாடகை வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினம் ரூபா 4.84 மில்லியன் ஆகும். மேலும், கூட்டுத்தாபனத்தினால் கட்டிட பொருட்களை கொள்வனவு செய்வதற்காகவும் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 328.70 மில்லியன் தொகையான கட்டிட பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஒ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் ரூபா 73.71 மில்லியன் பெறுமதியான (வரி நீங்கலாக) Steel Sheet Piles கொள்வனவு செய்திருந்ததுடன், அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.7.5 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் செயலாளரால் மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் கொள்வனவுகளுக்காக திணைக்கள பெறுகைகள் குழுவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும், மேற்படி கொள்வனவு நடவடிக்கைகள் பிரிதொரு குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.1 ஆம் பிரிவிற்கு முரணாக கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் பிரிவின் பகுதி தலைவர் பெறுகைகள் குழுவினை பிரதிநித்துவப்படுத்தியிருந்த போதிலும், தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவிற்கு கூட்டுத்தாபனத்திலிருந்து புறம்பான பிரதிநிதியொருவரும் பங்குபற்றியிருக்கவில்லை.

(iii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் உள்நாட்டு வழங்குனர்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள போது சர்வதேச போட்டி அடிப்படையிலான கேள்வி கோரல் முறைமை (ICB) விற்காக கூட்டுத்தாபனம் தேசிய போட்டி அடிப்படையிலான கேள்வி கோரல் முறையினை (NCB) பின்பற்றியிருந்தது.

(iv) அவ்வாறே இந்த பெறுகை நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன், Steel Sheet Piles கொள்வனவு செய்வதற்கான தேவைப்பாடு மற்றும் அவற்றை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் செயற்திட்டங்கள் எவை என்பது கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் இந்த பொருட்கள் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஓ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் நிர்மாண பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட 03 வெளிவாரி ஒப்பந்தங்களின் பணிகளை இடைநிறுத்த நேர்ந்தமையால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட திரண்ட நட்டம் ரூபா 15.97 மில்லியன் ஆகும்.

## 4.8 ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியின் விதிகளுக்கு முரணாக மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனப் பதவியணியினரில் 04 பேர் ஏனைய அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அவர்களது சம்பளமும் படியுமாகிய ரூபா 1.82 மில்லியனைக் கூட்டுத்தாபனமே செலவிட்டிருந்தது. அவ்வாறே கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வாகனமொன்று வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கொழும்பு தலைநகரை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தில் அதன் உப செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்த கெப் வண்டியொன்று அதற்காக பயன்படுத்தப்படாமல் பிரதான செயற்திட்டத்தின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்தது.

## 4.9 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரது எண்ணிக்கை 1,872 ஆக இருந்ததுடன், அத் திகதியில் உள்ளவாறான பதவியணியினரது எண்ணிக்கை 1,428 ஆகும். ஒவ்வொரு பதவிக்குமேற்ப கூட்டுத்தாபனப் பதவியணியில் 487 வெற்றிடங்களும் 43 மிகையும் நிலவின. அந்த வெற்றிடங்களிடையே கூட்டுத்தாபனத்தின் பிரதான பதவியாகிய பிரதிப் பொது முகாமையாளர் (விசேட செயற்திட்டங்கள்) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடலும் வர்த்தக அபிவிருத்தியும்) பதவி வெற்றிடமாக காணப்பட்டமை கூட்டுத்தாபனத்தின் குறைவான செயலாற்றல் தொடர்பில் தாக்கமளித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியான காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கம்பனியால் சம்பளங்களை மீளளிப்பு செய்யும் அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பதவியணியினர் 58 ஆன போதிலும், அந்த எண்ணிக்கை உள்ளடங்கலாக பதவியணியினை திருத்தியமைப்பதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.10 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தால் இலங்கை காணி மீட்பு (தனியார்) கம்பனிக்குக் குத்தகையாக வழங்கப்பட்டிருந்த 3186 கன அடி நீளமான கட்டிடத்திற்காக 2005 ஆம் ஆண்டின் பின்னர் வாடகை மதிப்பீடு செய்யப்படாமையால் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்க வேண்டிய தற்போதைய வாடகை வருமானம் இழப்பிற்குள்ளாகியிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் நடாத்திச் செல்லப்படும் மண் பரிசோதனை நிறுவனம் முறையான முகாமைத்துவமின்றி செயற்பட்டமையின் காரணத்தால் மீளாய்வாண்டில் பெறப்பட்ட நட்டம் ரூபா 5.21 மில்லியன் ஆகும்.

(இ) கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது Tract Excavator TE 04 வாகனத்தை கைத்தவிர்ப்பதற்காக ஆகக்கூடிய விலையினை சமர்ப்பித்திருந்த கொள்வனவாளர் தெரிவு செய்யப்பட்டுள்ள போது அதனை விட குறைவான விலையினை சமர்ப்பித்த கொள்வனவாளருக்கு வாகனத்தை வழங்கிய காரணத்தால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 83,370 ஆகும்.

## 4.11 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 189.16 மில்லியன் கிரயமுடைய மெதுவாக நகரும் கையிருப்பு மீதி காணப்பட்டது.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் சாலமுல்ல வீடமைப்பு திட்ட ஒப்பந்தத்திற்குக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 10.36 மில்லியன் பெறுமதியான 02 நீர் விசிறும் இயந்திரங்கள் (Hoist) மற்றும் ரூபா 40.32 மில்லியன் பெறுமதியான பலகைகள் (Scaffolding props) மற்றும் ஜீ.ஐ குழாய்கள் என்பன 2014 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாதிருந்ததுடன், மழை பெய்கையில் நனையாது இருப்பதற்குப் போதிய பாதுகாப்புடன் களஞ்சியப்படுத்தப்படாமையால் அவை பயன்படுத்த முடியாத நிலையில் பழுதடைந்தவாறிருந்தன.

(இ) தியத உயன வளாகத்திற்காக 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2.58 மில்லியன் பெறுமதியான 100 மறக்கரி தட்டுக்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் கொள்வனவு செய்த திகதி முதல் களஞ்சியத்தில் துருப்பிடித்தவாறு காணப்பட்டது.

(ஈ) கூட்டுத்தாபனத்தினால் 2012 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2.09 மில்லியன் கிரயமான எழுதும் கருவி மீளாய்வாண்டின் இறுதியளவில் கொள்வனவு செய்யப்பட்டு 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் எழுதும் பணிகள் வேறு நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) கூட்டுத்தாபனத்தினால் 2014 ஆம் ஆண்டின் போது பெல்லன்வில சிற்றுண்டிச்சாலைக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1.46 மில்லியன் கிரயமான தளபாடங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராததுடன், அவை இருப்புப் பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் உட்சேர்க்கப்பட வேண்டிய நிறுவனத்தின் தற்போதைய வளங்கள், கடந்த 03 ஆண்டுகளது செயற்பாட்டுப் பெறுபேற்று முன்னேற்றம் போன்ற தகவல்களை உள்ளடக்கிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) ரூபா 11,836 மில்லியன் பெறுமதியான செயற்திட்டங்கள் கூட்டிணைந்த திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவை யாவை என்பதை முகாமைத்துவம் குறிப்பாக இனங்காணத் தவறியிருந்தது.

(இ) கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பின்வரும் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கான பணிகள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(i) தீவடங்கிலுமான தாழ்ந்த சதுப்பு நிலம், வறண்ட அல்லது சேறு நிறைந்த காணிகளை இனங்கண்டு அத்துமீறிய காணி மீட்புகளைக் கட்டுப்படுத்துவதற்கும் அவற்றை மேற்பார்வையிடுவதற்குமான விதத்தில் வர்த்தமானி அறிவிப்புகளை வெளியிடுதல்.

(ii) கால்வாய்களை அண்டிய பிரதேசம் கால்வாய் பாதுகாப்புப் பிரதேசமாக இனங்காணப்பட்டு பாதுகாப்பிற்குள்ளான அவ்விடங்களில் தற்காலிக அல்லது வேறெவ்வித நிர்மாண வேலைகளையும் தவிர்த்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தலைப் பிரசுரித்தல்.

(ஈ) கூட்டிணைந்த திட்டத்தில் இனங்காணப்பட்ட உபாய வழிகளை எய்துவதற்குக் கூட்டுத்தாபனம் போதிய நடவடிக்கைகளை எடுத்திருக்காததுடன், அறிமுகப்படுத்தப்பட்ட பிரதான செயலாற்றல் குறிகாட்டியின் (KPI) பிரகாரம் செயன்முன்னேற்ற மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) கூட்டிணைந்த திட்டத்தில் மீளாய்வாண்டிற்கென இனங்காணப்பட வேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 892 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அது செயற்திட்டத்தின் மொத்தக் கிரயத்தினது 78 சதவீதமாகும். அவ்வாறே, கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பல்வேறு செயற்திட்டங்கள் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்துடன் இசைவுறும் விதத்தை தொடர்புபடுத்திக் காட்டப்பட்டிருக்கவில்லை.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

முகாமைத்துவத்தினால் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய துறைகள் தொடர்பில் வழிகாட்டுவதற்கான பிரதான நடைமுறையொன்றாக உள்ளகக் கணக்காய்வு பயன்படுத்தப்பட வேண்டுமாயினும், பாரிய அளவிலான நிர்மாண ஒப்பந்ததாரர் ஒருவராக கூட்டுத்தாபனத்தினது பணிகள் விரிவடையும் அதே சந்தர்ப்பத்தில் அர்த்தமுடைய பெறுபேறுகளை அடைவதற்கேற்றவாறு உள்ளகக் கணக்காய்வுப் பதவியணியைச் சக்தி மிக்கதாக்க கூட்டுத்தாபனத்தினால் போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தில் கூட்டுத்தாபனத்தின் செயல்முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் பிரதி பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) பதவி வெற்றிடமாக காணப்பட்டது.

## 5.3 பெறுகைகள் திட்டம்

கூட்டுத்தாபனத்தினால் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவிற்கு இணங்க எதிர்வரும் 03 வருட காலப்பகுதிக்கான (2016 - 2019) பெறுகைகள் நடவடிக்கைகளை உள்ளடக்கியவாறு பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டிற்காக விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், தயாரிக்கப்பட்ட திட்டத்தினுள் ஒவ்வொரு பெறுகை நடவடிக்கைகள் (Individual Procurement Actions), நடவடிக்கைக்குரிய மதிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் அந்த பெறுமதிக்குரியதாக நியமிக்கப்பட வேண்டிய பெறுகைகள் குழு என்ன என்பது மற்றும் பெறுகைகளுக்கு உரியதாக சரியான கால சட்டகமொன்று புலப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் பெறுகைகள் திட்டத்தினை 06 மாதங்களுக்கு ஒரு தடவை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளவாறான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பிடுகையில் 9 முதல் 322 சதவீதம் வரையிலான வீச்சிலான பொருண்மையான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 5.5 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்ட பின்வரும் விடயங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தன.

(அ) குறித்த பொறுப்புடைய நபர்களின் அங்கீகாரமின்றி பதவியணியினருக்குத் தொடர்ச்சியாகத் தொழில்சார் படிகளை வழங்குதல்.

(ஆ) உத்தியோகத்தர்களின் வாகனக் கடனகளுக்கு அறவிடப்படும் வட்டி தொடர்ச்சியாக மீளளிக்கப்பட்டிருந்தமை.

(இ) கூட்டுத்தாபனத்தினால் ரூபா 30.2 மில்லியன் கிரயத்தில் அபிவிருத்தி செய்த 3.5 ஏக்கர் காணியில் பிரதேச செயலாளரின் ஒத்துழைப்புடன் கோவில் ஒன்றை அமைத்த நபர்களுக்கு எதிராகத் துரித சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 2012 நவெம்பர் 30 ஆந் திகதி பொது முயற்சிகள் குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறித்த பணிப்புரையை அமுலாக்குவதற்குக் கூட்டுத்தாபனம் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

(ஈ) ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய பங்களிப்புத் தொகையைக் கணிப்பிடும் போது குறித்த அதிகாரச்சட்டம் மற்றும் சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட படிகள் மற்றும் ஏனைய ஊதியம் என்பவற்றைக் கணிப்பிடாமை.

(உ) 1993 மார்ச் 31 ஆந் திகதிய அமப/93/340/041 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க கொழும்பு 05, எல்விட்டிகல மாவத்தையில் அமைந்துள்ள 3.05 போர்ச் அளவான காணித்துண்டு 1993 யூன் 21 ஆந் திகதிய 73 ஆம் இலக்க குத்தகை ஒப்பந்தம் மூலம் 99 வருட கால குத்தகைக்காக நபரொருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அத்துடன், உடன்படிக்கைக்கு இணங்க காணியின் பெறுமதியாக ரூபா 152,000 தொகையும், வருடாந்தம் செலுத்த வேண்டிய ரூபா 305 தொகையான பெயரளவிலான குத்தகை பணமும் கூட்டுத்தாபனத்திற்கு பெற வேண்டியதாக காணப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) 2008 மார்ச் 28 ஆந் திகதி ஆரம்ப குத்தகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு அத்திகதியில் எஞ்சிய குத்தகை காலமான 84 வருடங்களுக்காக புதிய குத்தகை உடன்படிக்கையொன்றின் கீழ் இரண்டாவது குத்தகையாளருக்கு மீண்டும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2010 யூன் 30 ஆந் திகதி இரண்டாவது குத்தகையாளரும் உப குத்தகையாளர் ஒருவருக்கு 2013 ஆம் ஆண்டின் போது ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியிருந்தார். உப குத்தகையொன்றினை வழங்குவதற்கான ஏற்பாடுகள் ஆரம்ப குத்தகை உடன்படிக்கையில் இல்லாதிருக்கும் போது இது பற்றி கவனத்திற் கொள்ளாது 3 வருடங்களுக்கு அந்த காணி மீண்டும் மற்றொரு தனியார் கம்பனியொன்றிற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக இரண்டாவது குத்தகையாளரின் வேண்டுகோளின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் இணக்கப்பாட்டினை வழங்கியிருந்தது.

(ii) அவ்வாறே உப குத்தகை வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் அதற்குரிய நிர்வாக கட்டணங்களை கணிப்பிடும் போது கூட்டுத்தாபனத்தினால் காணியின் குத்தகை பெறுமதியினை 25 சதவீதம் வரை குறைத்தலின் அடிப்படையில் அறவிடப்பட்ட நிர்வாக கட்டணம் மிகவும் குறைவான பெறுமதியினை கொண்டிருந்ததுடன், பெறுமதியினை குறைத்தமைக்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட விடயங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை.

(iii) 2008 மார்ச் 28 ஆந் திகதி குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு அத்திகதியில் உள்ளபடியான எஞ்சிய குத்தகை காலமான 84 வருடங்களுக்காக புதிய குத்தகை உடன்படிக்கை ஒன்றின் கீழ் தனியார் கம்பனியொன்றிற்கு மீண்டும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கையொன்றினை இரத்துச் செய்து அமைச்சரவையின் தீர்மானமின்றி பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் புதிய உடன்படிக்கையொன்று கூட்டுத்தாபனத்தினால் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அவ்வாறே ஆரம்ப குத்தகை உடன்படிக்கையின் (III) ஆம் பிரிவிற்கமைய

99 வருட குத்தகை காலத்தின் பின்னர் மாத்திரமே குத்தகையாளரால் அல்லது உரிமையாளரால் குத்தகைக் காலம் திருத்தியமையக்கப்பட முடியும் எனினும் அந்த பிரிவும் அத்துமீறப்பட்டிருந்தமை.

(iv) ஆரம்ப உடன்படிக்கையின் 15 வருடங்களின் பின்னர் இரண்டாவது குத்தகை உடன்படிக்கையினை கைச்சாத்திடும் சந்தர்ப்பத்தில் காணி மீள மதிப்பிடப்படாது ஆரம்ப உடன்படிக்கையின் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தமையால் கூட்டுத்தாபனத்திற்கு பாரிய நட்டமொன்று ஏற்பட்டுள்ளமை.

(ஊ) வேரஸ் கங்கை மழைநீர் வடிகால் மற்றும் சுற்றாடல் முன்னேற்றத்திற்கான செயற்திட்டம்.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டிய மற்றும் நிறைவு செய்யப்பட வேண்டிய காலப்பகுதியினுள் மேற்படி செயற்திட்டம் நிறைவு செய்யப்படும் விதத்தினை காட்டும் கால அளவீடுகள் உள்ளடக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டமொன்று (Time Frame) மற்றும் கால்வாய், பாலங்கள், வடிகாண்கள், பராமரிப்பு வீதிகள், நீர் தேங்கி நிற்கும் பிரதேசம் போன்றவற்றுக்குரிய உத்தேச வேலைப் பட்டியலொன்று (Work Schedule / Inventory) தயாரிக்கப்படாது செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.

(ii) செயற்திட்டத்தின் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வெள்ள அபாய நிலைமைகளை இனங்காணல், அவற்றின் ஆகக்குறைந்த மற்றும் ஆகக்கூடிய அளவுகள் எவை என்பதும், அவற்றின் மூலம் ஏற்படக்கூடிய அபாய நிலைமைகளும் இனங்காணப்பட்டிராமை.

(iii) செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது இனங்காணப்பட்டிருந்த வலயங்கள் (Zone) மற்றும் உப செயற்திட்டங்கள் (Packages) ஆகியவற்றுக்காக தயாரிக்கப்பட வேண்டிய மாதாந்த மற்றும் வருடாந்த செயன்முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிராமை.

(iv) செயற்திட்டத்திற்குரிய வலய இலக்கம் 1, 2 மற்றும் 3 இன் கேபியன் மதிலை (Gabian Structure) தயாரிப்பதற்காக ரூபா 281,461,659 தொகையான மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அதன் அடிப்படையில் ஒப்பந்ததாரர்களுக்கு தொழிலாரம்பிப்பு முற்பணமாக கூடுதலான பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(v) ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களின்படி, கேபியன் அமைப்பை நிறுவுவதற்கு 4 x 6 அங்குல (100*150mm) கருங்கற்கள் மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டுமாயினும், அந்த அளவிலான கருங்கற்கள் 25 சதவீதத்திற்கும் குறைவாகவே நிர்மாண வேலைக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தமை அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனை மூலம் தெரியவந்தது. எஞ்சிய 75 சதவீதத்துக்கும் அதிகமான அளவுக்கு 12 x 16 அங்குல (200*400mm) கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இது பிரித்தானிய நியமமான BS 8002,1984 க்கு முரணானதும் ஆகும். இந்நியமத்தின் பிரகாரம் Gabian boxes களுக்குக் கற்களைப் பரவும் போது பயன்படுத்தக்கூடிய கருங்கற்களது அதி கூடிய அளவு 200mm ஆகும். இந்நிலைமையின் கீழ் Gabian boxes களுக்குள் அவ்வாறான பெரிய கற்களைப் பரவுவதன் மூலம் பாதிப்பு ஏற்படக்கூடும். அத்துடன், ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கேற்ப இவ்வமைப்பு நிமாணிக்கப்பட்டிருக்காமை.

(vi) வலய இலக்கம் 1 இன் 2,889 மீட்டர் நீளமான பகுதியினது கால்வாய்ப் பாதையை அபிவிருத்தி செய்வதற்கான வேலை 34 ஆம் உப செயற்திட்டங்களாக பகுதியாக்கப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த பகுதிகள் 54 மீட்டர், 68 மீட்டர், 100 மீட்டர், 110 மீட்டர் என மிகச் சிறிய அளவில் மொத்த ஒப்பந்தமும் வெவ்வேறாக்கப்படுவதற்கான காரணத்தைக் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தாமை மற்றும் இந்நிலைமையின் கீழ் 2,889 மீட்டர் நீளக் கால்வாய்ப் பாதையை அபிவிருத்தி செய்வதற்கு 3 மொழிகளிலும் தினப் பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்கு பெருமளவு கிரயத்தினை செலவிட நேர்ந்நதிருந்தது. அவ்வாறே, இச்சகல ஒப்பந்தங்களுக்கும் சுகாதார நடவடிக்கைகளுக்கான கழிவறைகளை அலுவலகங்களை நிர்மாணித்தல், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை ஏற்பாடு செய்தல் போன்றவற்றிற்கு ரூபா 1 மில்லியனுக்கு அதிகமான ஆரம்பச் செலவினம் (Preliminaries) மதிப்பிடப்பட்டு கொடுப்பனவிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(எ) கொலன்னாவ, சாலமுல்லயில் 216 வீடுகளை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் (ஏ கட்டிடம்) மதிப்பிடப்பட்ட ஒப்பந்த பெறுமதியான ரூபா 516.44 மில்லியனை விஞ்சி ரூபா 95.14 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமை.

## 5.6 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உயரிய சுற்றாடல் அபாயத்துடனான சதுப்பு நிலமாக சுற்றாடல் அதிகாரசபையால் பெயரிடப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான முத்துராஜவல இயற்கை சதுப்பு நிலத்திற்கு கொழும்பு மாநகர சபையால் நாளாந்தம் கொட்டப்படும் 700 டொன் அளவான குப்பை எதுவிதமாக சுற்றாடல் அல்லது சாத்தியவள கற்கையொன்றினை மேற்கொள்ளாது நாளாந்தம் கொட்டப்படுவதாக 2017 யூன் 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தள கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட போதிலும், அதனை தடுப்பதற்கு கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இவ்வாறு குப்பைகள் கொட்டப்படுவதன் காரணமாக பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தின் நீர் மற்றும் வளி மாசடைதலின் அடிப்படையில் அதில் வாழும் எயிரினங்களின் நிலவுகைக்கு போன்றே இயற்கை சூழலுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தொடரந்தும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் மேல் மாகாணத்தை தவிர்ந்த இலங்கையின் 04 மாகாணங்களில் உள்ள தாழ்ந்த, சதுப்பு நிலம், வறண்ட அல்லது சேறு நிறைந்த காணிகளின் எல்லைகளை நிர்ணயித்து வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்த போதிலும், அந்த காணிகளில் அத்துமீறிய நிலமீட்டல்கள், அத்துமீறிய குடியிருப்புகளை இனங்காணுவதற்கான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், அந்த நிலைமைகளை பரிசீலிப்பதற்காக உத்தியோகத்தர்களும் இணைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக எதிர்காலத்தில் பல்வேறு சமூக மற்றும் சூழல் பிரச்சினைகளுக்கு கூட்டுத்தாபனம் நேரடியாக முகங்கொடுக்க நேரிடாது என்பதனை கணக்காய்வினால் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(இ) வேரஸ் கங்கை மழைநீர் கால்வாய் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் செயற்திட்டத்தின் காணிகளை சுவீகரிக்கும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டு 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அதன் செயன்முன்னேற்றம் மிகவும் குறைவான மட்டத்தில் நிலவியமையின் காரணத்ததால் செயற்திட்டத்தினால் பாதிப்பிற்குள்ளாகிய வீட்டுரிமையாளர்களின் வீடுகளை மீண்டும் நிர்மாணிக்க முடியாது பல வருடங்களாக பரிதாபத்திற்கு உள்ளாகியுள்ளர்.

அவ்வாறே கால்வாய்க்கு எல்லையான போதிலும், சுவீகரிக்கப்படாத காணித்துண்டுகளில் அமைந்துள்ள சில வீடுகள் கால்வாயின் புனரமைப்பு பணிகளால் தாழிறங்கி உள்ளதாக தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. பொருத்தமான திட்டமொன்றும் கற்கையொன்றினையும் மேற்கொள்ளாது காணிகளை சுவீகரித்தல், கால்வாய்களின் அபிவிருத்திக்கு காலங்கடந்த இயந்திர உபகரணங்களை பயன்படுத்துவதனால் ஏற்படும் அதிர்வு (Vibration) இந்த நிலைமைக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. அவ்வாறே இவ்வாறான இடங்களில் கால்வாய்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உரிய முடிவுகளை வழங்குவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்பு |
|---|---|
| (அ) ஒப்பந்த நிர்வாகம் | திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் அமுலாக்கப்படாமை, ஒப்பந்தங்களது செயல் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை மற்றும் நிர்மாண நியமங்களுக்கேற்ப சில நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிராமை. |
| (ஆ) பெறுகை நடைமுறை | (i) போட்டி ஏற்படும் விதத்தில் கூறு விலைகளைக் கோராது முன்னரே தீர்மானிக்கப்பட்ட விலையில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை. |
| | (ii) காணிகளது தற்போதைய மதிப்பீட்டுப் பெறுமதி கணிப்பிடப்படாது சில காணிகள் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் வழங்கப்பட்டமை. |
| (இ) நிதி முகாமைத்துவம் | (i) குறித்த பணி முடிவுற்றதும் முற்பணத்தையும் அபிவிருத்தியாளரிடமிருந்து பெறப்பட்ட வைப்புத் தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை, கடன் உடன்படிக்கைப் பிரகாரம் கடன் தவணைத் தொகையையும் வட்டியையும் அவ்வப்போது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | (ii) உடன்படிக்கைப் பிரகாரம் குத்தகை வாடகையை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளாமை |

(iii) பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பெறப்பட்ட அரசாங்க மானியத்தை நோக்கத்திற்குப் புறம்பாக பயன்படுத்தப்பட்டுள்ளமை.

(ஈ) கணக்கீடு

(i) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பலவற்றிற்கு ஒவ்வாத விதத்தில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தமை.

(ii) நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்களும் பொறுப்புகளும் சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்படாமையால், அவற்றினது பெறுமதி அதிகமாகவும் குறைவாகவும் கணிப்பிடப்பட்டிருந்தமை.